**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஒசூர்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி. சி. எண். :** 50/2015
**அ.சா. :** 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவலிங்கம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ஸ்ரீராமலு |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 43 |

1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **நாள்: 08.08.2023**

**1 முதல் 3 எதிரிகள் மற்றும் 5 முதல் 8 எதிரிகள் ஆஜர் 4ம் எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை :**

**1.** நான் தற்போது ஒசூர் எலசகிரியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு சென்ட்ரிங் வேலை செய்து வந்தேன் தற்போது டாடா ஏசி வாகனம் ஒட்டுநராக பணிபுரிகிறேன். சுரேஸ்பாபு என்பவரின் கட்டிட கான்ட்ராக்ட்டில் வேலை செய்து வந்தேன். கடந்த 11.11.2015ம் தேதி காலை 08.00 மணியளவில் புக்கசாகரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் இரும்பு சென்ட்ரிங் சீட் 165 எண்ணிக்கையில் பள்ளியில் இறக்கிவிட்டு அடுத்தநாள் காலை வந்து பார்த்போது ஏற்கனவே இறக்கிவைக்கப்பட்டிருந்த இரும்பு சென்ட்ரிங் சீட் 165 காணாமல்

போய்விட்டது. மேற்படி சென்ட்ரிங் சீட்களை நான் ரவி, குமரன், வினோத் ஆகியோர் கொண்டுவந்து இறக்கினோம். மேற்படி சென்ட்ரிங் சீட்கள் காணாமல் போனது பற்றி கட்டிட கான்ட்ராக்டர் சுரேஸ்பாபுவிடம் தகவல் தெரிவித்தேன். பிறகு அங்கு அக்கம்பக்கத்தில் தேடி பார்த்தும் சென்ட்ரிங் சீட் கிடைக்ககாததால் பேரிகை காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஆகும். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிறகு ஒரு வாரம் கழித்து பேரிகை போலிசார் திருடுபோன சென்ட்ரிங் சீட்கள் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அந்த தகவலின் பேரில் நான் காவல் நிலையம் சென்று பார்த்தேன் அங்கு காணாமல் போன 165 இரும்பு சென்ட்ரிங் சீட்கள் இருந்தது. இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR